அருணோதயா குழந்தைகள் சங்கங்களின் கூட்டமைப்பு



CONFEDERATION OF ARUNODHAYA CHILDREN SANGAM
ARUNODHAYA Children Sangam
20 Years ANNIVERSARY

# 20ம் ஆண்டு கொண்டாட்டத்தின்
# சாதனை விழா மலர்
# 2021

Supported By

Asmae Association Sœur Emmanuelle

ARUNODHAYA
Centre for Street and Working Children

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு பாடல்

நான் என்பதை நாம் என்று உணர்த்திட்ட
குழந்தைகளை குழந்தைகளாக வளர்த்திட்ட
குழந்தைகளின் ஆற்றலை வெளிக்காட்டிட்ட சங்கம் இது!
எங்கள் அருணோதயா குழந்தைகள் சங்கம் இது.

பல்லவி

சங்கமுங்க சங்கம் இது
குழந்தைகளின் சங்கம்
குழந்தை உரிமையை உணரச் செய்த சங்கம் –குழந்தை
பங்கேற்பை வலியுறுத்தும் சங்கம்

சரணம்

பங்கேற்பை வலியுறுத்தும் சங்கம்
பல சாதனைகள் நிகழ்த்திடும் சங்கம்
எங்களை நாங்களே புரிந்துகொண்ட சங்கம்
எங்களையே எல்லோருக்கும் அறியசெய்த சங்கம்.
சங்கமுங்க

சந்தோசம் கொடுத்திடும் சங்கம்
பல நண்பர்களை தந்திடும் சங்கம்
நாளைய தலைவர்களை பெற்றெடுக்கும் சங்கம்
நல்லதையே திட்டமிட்டு செயல்படுத்தும் சங்கம்
சங்கமுங்க
பெற்றோருக்கும் விழிப்பளித்த சங்கம்
பல பெரியோரும் அறிந்திட்ட சங்கம்
குழந்தை உரிமைகளை காத்திடும் சங்கம் –பல
அணிகளை உருவாக்கி வளர்ச்சி கண்ட சங்கம் –பல
அணிகளை உருவாக்கி ஏற்றம் கண்ட சங்கம்

சங்கமுங்க

# அருணோதயா குழந்தைகள் சங்கங்களின் கூட்டமைப்பு



CONFEDERATION OF ARUNODHAYA CHILDREN SANGAM

ARUNODHAYA Children Sangam

20 Years ANNIVERSARY

# 20ம் ஆண்டு கொண்டாட்டத்தின்
# சாதனை விழா மலர்
# 2021

Supported By

Asmae Association Sœur Emmanuelle

ARUNODHAYA Centre for Street and Working Children

அருணோதயா குழந்தைகள் சங்கங்களின் கூட்டமைப்பு
20ம் ஆண்டு கொண்டாட்டத்தின் சாதனை விழா மலர் 2021

Copyright c Arunodhaya
All rights reserved

ஒருங்கிணைப்பு

முனைவர். வர்ஜில் டி சாமி

வெளியீடு

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு, இராயபுரம், சென்னை – 600013
Ph : 044 - 42632264, Email : arunodhayaorg@gmail.com
www.arunodhayacentre.in

வடிவமைப்பு

G.டான்போஸ்கோ

# உள்ளடக்கம்


பக்கம் எண்

I **முன்னுரை**

ii **அணிந்துரை** - அருணோதயா குழந்தைகள் சங்கம் வெற்றி சிறக்க வளர்க ! வாழ்க !

1 **விதைக்கப்பட்ட விதை... நிழல் தரும் மரமானது...**

**ஆதரவாளர்களின் வாழ்த்துக்கள்**

6 ★ ASMAE
7 ★ Mr. Sugata Roy UNICEF
8 ★ Ms. Girija Kumarababu

**குழந்தை அமைப்புகளின் வாழ்த்துக்கள்**

10 ★ விடியல் குழந்தை உரிமைகள் இயக்கம்
12 ★ ஆர்வம் குழந்தைகள் இயக்கம்

**குழந்தைகளின் படைப்புகள்**

14 ★ குழந்தைகள் பாதுகாப்பு
15 ★ சாதனை குழந்தைகள்
15 ★ குழந்தை தொழிலாளர்கள்
18 ★ நந்தவனம்
18 ★ மலர்வதற்குள் உதிர்ந்த மொட்டுகள்
19 ★ வேண்டும் குழந்தைகள் சங்கம்
19 ★ Children's Right Poem

**பங்குதாரர்களின் பாராட்டுக்கள்**

22 ★ திருமதி. A. எழிலரசி, EX. MC
23 ★ திருமதி. S. சாருலதா,தலைமை ஆசிரியர், திருவொற்றியூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி
24 ★ திரு.வெங்கடேசன், உதவி தலைமை ஆசிரியர், சென்னை மேல்நிலைப்பள்ளி பட்டேல் நகர்

**முன்னாள் பணியாளர்கள் வாழ்த்துக்கள்**

26 ★ யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் செல்வி. கி.ரம்யா,
முன்னாள் ஆலோசகர் -குழந்தைகள் பங்கேற்பு

30 ★ Touched,overwhelmed with joy and thankful
திருமதி. சுகந்தி, முன்னாள் நிகழ்வு அதிகாரி

30 ★ வாழ்க பல்லாண்டு - திருமதி. மனதா குமார்,முன்னாள் கல்வி திட்ட அதிகாரி
31 ★ பூக்களின் பயணம் -திருமதி. சு.சித்ரா முன்னாள் திட்ட அதிகாரி.
33 ★ மண்ணில் விழுந்த விதைகள் திருமதி. C.வளர்மதி முன்னாள் அமைப்பாளர்

34 ★ **அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பின் 20ம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் ஓர் கண்ணோட்டம்**
திருமதி. செல்வி, குழந்தைகள் சங்க கருத்துரையாளர்

# முன்னுரை

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு இருபது ஆண்டுகள் கொண்டாட்ட நிகழ்வில் இந்த விழா மலரை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். அருணோதயா குழந்தை தொழிலாளர் மையமானது குழந்தை தொழில் மறைய வேண்டும், அனைத்து குழந்தைகளும் கல்வி பயின்று அவர்களது உரிமைகளை துய்த்துணர்ந்து மாண்புடன் வாழ வேண்டும் என்ற இலக்குடன் 1992 ஆம் ஆண்டில் பணியைத் துவங்கியது. குழந்தைத் தொழிலாளரை மீட்டு பள்ளியில் சேர்க்கும் நிலையில் குழந்தைகள் தங்கள் உரிமைகளை உணர்ந்து பங்கேற்பு உரிமையை நடைமுறையாக்க குழுவாக சேர்ந்தனர்.

ருஜேஊநுகு அமைப்பின் துணையுடன் 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற குழந்தைகளின் கூடுகையில் குழந்தைகள் சங்கத்திற்க்கான குறிக்கோள், உறுப்பினர் தகுதி, செயல்பாடுகள் குறித்து வரையரை குழந்தைகளால் உருவாக்கப்பட்டது. அருணோதயா குழந்தைகள் சங்கம் பல்வேறு மண்டலங்களில் துவங்கப்பட்ட தருணத்தில் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு உருவானது.

அருணோதயா குழந்தைகள் சங்கம் துவங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை பிரான்சு நாட்டை சேர்ந்த ஆஸ்மே (ASMAE) அமைப்பு அருணோதயாவிற்கு பக்கபலமாக நின்று நிதியுதவி மற்றும் கருத்தாக்கம், பணியாளர்களின் திறன், வளர்ப்பு ஆவணப்படுத்துதல் போன்றவற்றில் ஆதரவு அளித்தனர். இந்த நாளில் அவர்களை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். ஆஸ்மேவின் ஆதரவு குழந்தைகள் பங்கேற்பை அருணோதயா குழந்தைகள் சங்கம் மூலம் ஆழப்படுத்தவும் விரிவாக்கவும் மிக மிகப் பயனுள்ளதாக இருந்தது.

முதல் கூடுகையில் துணைபுரிந்த UNICEF நிறுவனம் இன்று மட்டும் குழந்தைகளுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிப்பதிலும் அவர்களது திறன்களை மேம்படுத்துவதிலும் துணையாக நின்றுள்ளது.

இந்த இருபதாம் ஆண்டு விழா நிகழ்வில் முன்னாள் சங்க உறுப்பினர்களுடன் உரையாட சிறந்த வாய்ப்பாக அமைந்தது. அவர்களது வளர்ச்சி ஆசிரியராக, வழக்கறிஞராக, பொறியாளர், அரசு மற்றும் தனியார்துறை, கலைதுறை, நாட்டுபுற கலைஞர் என பல்வேறு பரிமாணங்கள் பெற்று வெற்றி நடைபோடுவது மிக்க மகிழ்ச்சி அளிக்கின்றது.

அருணோதயா அமைப்பின் அறங்காவலர்கள் முனைவர் S.J.A பாக்கியராஜ், முனைவர்.பெர்னார்ட் டி சாமி, முனைவர். நான்சி அவர்கள் அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் வளர்ச்சிக்கு பெரும் துணையாக இருந்துள்ளனர். முனைவர் S.J.A பாக்கியராஜ் அவர்கள் இந்த விழா மலரில் அணிந்துரை வழங்கி சிறப்பு சேர்த்துள்ளார்.

அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் 20ம்ஆண்டு நிறைவு விழாவில் வாழ்த்துரை வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக விடியல் குழந்தை உரிமை குழந்தைகளும் மற்றும் ஆர்வம் குழந்தைகள் இயக்கத்திலிருந்து வாழ்த்து வழங்கியிருப்பது மிக்க மகிழ்ச்சி உங்கள் அனைவரின் வாழ்த்தும், அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு இன்னும் சிறப்பாக தங்கள் பங்கேற்பு உரிமையை நிலை நாட்ட உத்வேகமாக இருக்கும்.

குழந்தை பங்கேற்பை உறுதி செய்வோம் !
குழந்தை உரிமையை நிலை நாட்டுவோம் !!

**முனைவர். வர்ஜில் டி சாமி,**
**இயக்குனர், அருணோதயா**



# அருணோதயா குழந்தைகள் சங்கம் வெற்றி சிறக்க வளர்க ! வாழ்க !

மனிதராய்ப் பிறக்கிறோம். ஒரு சூழ்நிலை, ஒரு பின்னணி, ஒரு தளத்தில் இருக்கிறோம். இவை சிலருக்கு உதவும். பலருக்குத் தொல்லை தரும். தொல்லையை அனுபவிப்பவர்கள் பலர். அவர்களில் குழந்தைகள் நமது கரிசனத்திற்கு உரியவர்கள். அக்குழந்தைகளைப் பார்க்கும்போது, வீதியோரச் சிறார்கள், குழந்தைத் தொழிலாளர் எல்லாரும் 'முட்செடிக்குள் அகப்பட்ட பயிர்' போலத் தென்படுகின்றார்கள். எந்தப் பயிரும் நன்கு வளர, பிற வளங்களோடு காலை இளஞ்சூடு தரும் சூரியன் தேவை. செங்கதிர்கள் எழுந்து பயிர்களை வளர்க்கும். பயிர்கள், கதிரவனோடு நீர், காற்று, மண் வளம், மேலும் தேவையான சத்து எல்லாம் கிடைக்கும்போது, அவைகளோடு இணைந்து பங்கெடுக்கின்றன. இவ்வாறு பங்கெடுப்பதால், வளர்கின்றன. முட்செடிகளை நீக்கும் உதவி கிடைக்க, பயிர்கள் அருமையாக வளர்ந்து கனி கொடுக்கின்றன.

இதுவே அருணோதயாவில் நடக்கிறது. குழந்தைகள் சங்கம் பிறக்கிறது. அருணோதயா குழந்தைகளை அணைத்து அன்பு காட்டுகிறது. அருண் என்றால் சிவப்பு. உதயம் என்றால் பிறப்பு. செஞ்சூரியன் பிறந்து அணைக்க, 'முட்செடிகள்' நீங்க, குழந்தைகள் வளங்கள் பெறுகின்றனர். சங்கத்தின் மூலம் திறமைகளை வளர்க்கின்றனர். பங்கெடுக்கின்றனர். நல்ல தரமான, மனிதம் நிறைந்த மக்கள் ஆகின்றனர். புத்துணர்ச்சியோடு, மன எழுச்சியோடு, அருமையான ஆளுமைகளாக உருவெடுக்கிறார்கள். எவ்வளவு அருமையான முயற்சிகள்! வெற்றிகள்!

20 ஆண்டுகள் களங்கண்ட அருணோதயா குழந்தைகள் சங்கம் நம் எல்லாருக்கும் ஏராளமாய் மகிழ்ச்சி தருகிறது. பிரமிப்பு தருகிறது. உண்மையான பெருமை தருகிறது. இத்தகைய பூரிப்போடு மனமார்ந்த வாழ்த்துகள் தெரிவிப்போம். அருணோதயாவைப் பெருங்கனவாய் எடுத்து மெய்ப்பட வைக்கும் இயக்குனர் முனைவர் வர்ஜில் டி சாமி-யையும் மையத்தைத் தொடங்கி வைத்த அறங்காவலர் முனைவர் பெர்னார்டு டிசாமி-யையும் குழந்தைகளை ஊக்குவிக்கும் கல்வியாளர்களையும் மனமார வாழ்த்துவோம். அருணோதயா குழந்தைகள் சங்கம் வாழ்க! வெற்றி சிறக்க வளர்க! வாழ்க!

முனைவர் சூ. பாக்கியராசு
Trustee and former HOD of English,
Loyola College, Chennai

# விதைக்கப்பட்ட விதை... நிழல் தரும் மரமானது...

திருமதி E.மாலா இலக்குமணன்



அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம் பல கோடி குழந்தைகளின் வாழ்க்கை பயணத்தை வசந்த காலமாகவும் பிரகாசமாகவும் மாற்றியுள்ளது என்பதற்கு பல முன் மாதிரியான இளம் தலைவர்களை உருவாக்கி உள்ளது. இத்தகைய இளம் தலைவர்களால் வரும் எதிர்காலம் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்யும் சூழலை உருவாக்கும்.

மேலும் குழந்தைகள் சுதந்திரமாக அவர்களின் குழந்தை பருவத்தை இன்பமாய் அனுபவிக்க முடியும். இத்தகைய மாற்றம் நம்முடைய சமூகத்தில் மிகப் பெரிய பிரதிபலிப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. இந்த மாற்றத்திற்க்கான செயல்பாட்டில் என்னுடைய பங்கும் உள்ளது என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது .

அருணோதயா மூலம் எனக்கு ஏற்பட்ட அனுபவம் என்னுடைய வாழ்க்கைப் பயணத்தின் திசையை மாற்றி பல ஏற்றங்களைக் கண்டத்தில் அருணோதயாவின் பங்கு மிக முக்கியமானது. அன்று எனக்கு கிடைத்த வழிகாட்டல் என்னை என்னுடைய சமூகத்தின் முன் மாதிரியானவளாக மாற்றியுள்ளது.

அதற்கு என்னுடைய நன்றியை அருணோதயாவிற்கு எப்போதும் தெரிவிக்கக் கடமை பட்டிருக்கிறேன். மேலும் நன்றி தெரிவிக்கும் விதமாக என்னுடைய சமூகத்தையும் என்னுடைய குடும்பத்தினையும் சிறப்பாக வழிநடத்தி சமூகத்தின் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வேன்.

என்னுடைய இந்த மாற்றத்திற்குக் காரணம் என்னுடைய வாழ்க்கையில் நடந்த விஷங்களும் அதில் அருணோதயாவின் பங்கு குறித்து உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**என் குடும்பம்:**

**எனது குடும்பம் அப்பா, அம்மா, தங்கை, மற்றும் தாத்தா, பாட்டி என மிகவும் சிறிய குடும்பம். என்னுடைய அப்பாவிற்கு குடிபழக்கம் இருந்தது. அம்மா வீட்டு வேலை செய்து வந்தார். தங்கை படித்து கொண்டிருந்தாள். இத்தகைய சூழல் என்னை மிகவும் யோசிக்க வைத்து என்னுடைய கல்வியையே பாதிக்கும் அளவு இருந்தது. இந்த நிலையில் என்னுடைய படிப்பிற்காக வேலை பார்க்கும் சூழல் ஏற்பட மாதம் ரூ.100 வருமானத்திற்கு நான் என்னுடைய வயதில் வீட்டு வேலைக்குச் செல்லும் நிலை வந்தது. அந்த முதலாளி எனக்கும் என்னுடைய படிப்பிற்கும் பல உதவிகளை செய்தார்கள் உதாரணமாக: காலை உணவு கொடுப்பது, நோட்டு புத்தகம் வாங்கிதருவது, பாடம் கற்று கொடுப்பது போன்றவை ஆகும்.**

**எனவே தொடர்ந்து என்னுடைய வேலையையும் பார்த்து கொண்டு படிக்கவும் ஆரம்பித்தேன். இதனால் என்னுடைய குழந்தை பருவத்தினை முழுமையாக என்னால் அனுபவிக்க முடியாமல் போனது. அந்த சூழலில் எனக்கு விளையாட்டு மற்றும் நண்பர்கள் என்று யோசிக்க முடிய வில்லை. படிப்பும் மற்றும் குடும்பத்தினை பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் எண்ணமும் மட்டுமே இருந்தது. இந்த நிலையில் அருணோதயா எனக்கு அறிமுகம் ஆனது. எங்கள் பகுதியில் மாலை வகுப்பில் அருணோதயா அமைப்பின் பணியாளர்கள் விளையாட்டு மூலம் கல்வி கற்றுத் தர ஆரம்பித்தனர். இதனால் நான் மாலையில் அங்கு செல்ல ஆரம்பித்தேன். பல தகவலை கற்றுக் கொண்டேன். எனவே தொடர்ந்து அருணோதயா செல்ல ஆரம்பித்தேன் 2001ல் குழந்தைகள் சங்கம் தொடங்கப்பட்டது. மேலும் குழந்தைகளின் உரிமைகள் குழந்தைகளின் கல்வியின் முக்கியத்துவம் குறித்து தெரிந்து கொண்டது மேலும் என்னைத் தொடர்ந்து படிக்க ஊக்கப் படுத்தியது. இதனால் என்னை பற்றி எனக்கே அறிந்து கொள்ள பெரும் உதவியாக இருந்தது. இதனை தொடர்ந்து பல பயிற்சிகள் அருணோதயா மூலம் எனக்கு கிடைத்து.**

**அவை :**

- **இளம் வழிநடத்துனர் பயிற்சி**
- **பயிற்சியாளருக்கான பயிற்சி**
- **பத்திரிக்கையாளர்க்கான பயிற்சி**
- **கலைப் பயிற்சி**
- **தலைமைத்துவப் பயிற்சி**
- **ஆவணப்படப் பயிற்சி**
- **நிழற்படப் பயிற்சி**
- **குறும்படப் பயிற்சி**

**என பல பயிற்சிகள் மூலம் என்னிடம் உள்ள பல திறமைகளை கண்டறிய முடிந்தது.**

**நான் கண்டறிந்த எனது திறமைகள் :**

- பாடல் பாடுவது
- நிழல்படம் எடுப்பது
- பறையாட்டம் ஆடுவது.
- ஒயிலாட்டம்
- கும்மியாட்டம்
- மாட்டு கொம்பாட்டம்

சிலம்பாட்டம் போன்ற கிராமிய கலைகளை கற்று பயிற்சியாளராக உருவானது.

- சிறுவர் இதழ் தயாரிப்பது
- குழுவினை ஒருங்கிணைப்பது
- நிகழ்வுகளைஒருங்கிணப்பது
- ஒரு நல்ல பயிற்சியாளராக இருப்பது.
- ஆவணபடுத்துவது போன்ற திறமைகள் வளர்ந்து என்னை தனித்துவ மிக்கவளாக மாற்றி உள்ளது. இந்த பயிற்சி எனது அன்றாட வாழ்விற்கு உதவியாக இருக்கிறது.

இந்த பயிற்சி மூலம் குழந்தைகுழுவில் இருந்த போது பல முக்கிய பொறுப்பினையும் ஏற்க செய்தது என்னை மேலும் ஊக்கப்படுத்தியது. அதில் குறிப்பாக குழந்தைகள் சங்க கூட்டமைப்பில் 72 குழந்தைகளின் குழுக்கள் இருந்தது. அதற்கு துணைசெயலாளராக இருந்தது.

இலங்கையில் 2003 ல் நடைபெற்ற பயிற்சியளர்க்கான பயிற்சி அதனை தொடர்ந்து தாய்லாந்தில் நடைபெற்ற தொடர் பயிற்சியிலும் கலந்து கொண்டு, இந்தியக் குழந்தைகளின் சார்பாக பேசியது மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது. இதன் மூலம் FCMRP என்னும் பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு (தமிழ்நாடு / புதுவை) உருவானது. இதில் என்னுடைய பங்கு உள்ளது என்பது மிகவும் பெருமையாக இருக்கிறது. இந்த கூட்டமைப்பின் மாநில செயலாளராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இதுவும் எனக்கு மறக்க முடியாத நிகழ்வாக இருந்தது. மேலும் என்னுடைய படிப்பினையும் பல தடைகளை கடந்து MA சமூவியல் (தொலைத்தர கல்வி) வரை படிக்க முடிந்தது. கல்லூரி படிப்பு முடித்த உடன் அருணோதயா அமைப்பிலே பணியாளராக சேர்ந்து எனது பணியைத் தொடர்ந்தேன்.

அது:

- 2009 வீட்டுவேலையில் குழந்தைகள் அற்ற சமூகம் என்னும் திட்டத்தின் மண்டல அமைப்பளார்
- 2011கோடம்பாக்கம் மண்டல ஒருங்கிணப்பாளர்
- 2013 குழந்தைகள் சங்க திட்ட ஒருங்கிணப்பாளர்
- 2015 இரயில்வே சைல்டுலைன் ஒருங்கிணப்பாளர் என்னும் பல பொறுப்புக்களை அருணோதயா என் மீது நம்பிக்கை வைத்து வாய்ப்பு கொடுத்து மேலும் என்னை மெருகேற்றிக் கொள்ள வாய்ப்பளித்தது.

தற்போது எனக்கு திருமணம் ஆகி அன்பான கணவர் அழகான பெண் குழந்தை என அழகிய குடும்பமாக மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறேன். என்னுடைய குடும்பத்திலும் எந்த ஒரு தயக்கமும் இல்லாமல் பல முடிவுகளை என்னால் எடுத்து நல்ல முறையில் வழி நடத்த முடிகிறது. என்னுடைய மகளை எந்த விதமான குறையும் இல்லாமல் அவளுடைய குழந்தை பருவத்தினைஅனுபவிக்கவும் நான் இழந்த எல்லா சந்தோசத்தையும் தந்து ஒரு நல்ல தலைவியாக வளர்ப்பேன் என்னும் நம்பிக்கை எனக்கு உள்ளது. மேலும் நான் குழந்தைகளுக்காக சட்டரீதியாக உதவி செய்ய சட்டம் படித்து ஒரு வழக்கறிஞராக வேண்டும். என விரும்புகிறேன்.

இதே போல் அருணோதயா அமைப்பும் ஒரு தொலைநோக்கினை கொண்டு செயல்படுகிறது.

அது *நீதியான* தாகும். இதனை ஒட்டியே 20 ஆண்டு காலம் அருணோதயா குழந்தைகள் சங்கங்களை உருவாக்கி அவர்களின் தலைமை பண்பின் மூலமும், சமூகத்தில் உள்ள மற்ற பங்குதாரர்களையும் பல பயிற்சிகள் மற்றும் பல நிலையான குழுக்களை உருவாக்கி கட்டமைப்புகளை அமைத்துள்ளது. இதனால் பல பகுதிகள் குழந்தை உரிமை போற்றும் பகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

இது போன்று சமூக மாற்றம் மற்றும் வளர்ச்சி அடைய சமூக அங்கத்தினராக உள்ள நாம் ஒவ்வொருவரும் குழந்தைகளின் எதிர்காலம் மற்றும் வளர்ச்சி பாதுகாப்பினை கருத்தில் கொண்டு செயல்பட்டு ஒரு சிறந்த சமூக கட்டமைப்பினை உருவாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். நாம் அனைவரும் இணைந்தால் கட்டாயம் மாற்றம் ஏற்பட்டு என்னை போல் பல குழந்தைகளின் வாழ்வு ஒளிரும் .

இந்த பதிவின் மூலம் மிகவும் அழுத்தமாக நான் பதிய வைக்க விரும்புவது என்னவென்றால் அருணோதயா அமைப்பு என்னுடைய வாழ்வில் வரவில்லை என்றால் கட்டாயம் என்னுடைய வாழ்வு இப்படி ஒரு வளர்ச்சியையும் ஏற்றத்தையும் கண்டிருக்காது எனவே அருணோதயா இயக்குனர், மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் என்னுடைய சினம் தாழ்ந்த நன்றிகள்.

வணக்கம் !



# ஆதரவாளர்களின் வாழ்த்துக்கள்

Asmae Association
Sœur
Emmanuelle

Paris, 11 October 2021

Dear members of the children sangam, dear friends in Arunodhaya,

I am very pleased, with these words, to celebrate 20 years of children sangam: what a tremendous achievement, what a wonderful journey!

Asmae is very honoured to have been able to support Arunodhaya and children sangam since 2002. In this journey, the support was not only funding but also networking. Thus, Asmae supported Arunodhaya in the formation of the Forum for Promotion of Child Participation, a State-level network of CSOs promoting child participation, as well as the formation of the State-level Federation of children Movements for Right to participation. Capacity-building was also provided, including by supporting the development of activity and training manuals on child participation. Documentation of achievements and good practices as well as involvement of work camp volunteers were other initiatives carried out together.

The partnership between Asmae and Arunodhaya has been very fruitful and the work around children sangam was central to this collaboration. I believe many activities have been conducted by the sangams at different levels, community, school and the Municipality levels, with great achievements. It has been very inspiring to see so many girls and boys raising their voices for their rights! I had the great opportunity to meet with some of you, active members of the sangams, over the past years and I must say that each time, I was very impressed by your confidence, commitment and enthusiasm.

Congratulations for all the actions you have carried out so far and for all the successes obtained! I wish you and the children sangam, happiness and success in your adventures. May this mobilisation by children, with children, for children continue and materialise in greater rights for all!

Long live the children sangam!

Asmae - Association Soeur Emmanuelle
Siège social : 6 Juliette Dodu - 75010 PARIS
SIRET 34740315600040 - APE 8899B
Reconnue d'Utilité Publique

Perrine Bacchetta Savoie

Asia and Middle-East Area Manager

Asmae-Association Soeur Emmanuelle

Asmae - Association sœur Emmanuelle - Reconnue d'Utilité Publique et habilitée à recevoir des legs.
259-261 rue de Paris - 93100 Montreuil - France - Tél. : +33 1 70 32 02 50 - Email: infos@asmae.fr
Siège social : 6 rue Juliette Dodu - 75010 Paris - Association loi 1901 à la préfecture de Paris - Siret 347 403 156 000 40 - APE 8899B
www.asmae.fr

## Greetings

**Mr. Sugata Roy**
**UNCEF**



A big congratulations to CACS and to their mentors. It is indeed a fantastic milestone to achieve! In last two decades, the CACS has moved from being a child, became a responsible adolescent 88 and now a committed young person. I am sure the inter generational process will continue. I have no doubt that this young person's platform will continue to be voice for children and ensure realisation of child rights. I am sure your relentless efforts will ensure eradication of child marriage and end violence, abuse and exploitation of children in the years to come. My best wishes to all members of CACS and Arunodhaya in their future endeavors.

## My best wishes



I have known Virgil for more than 35 years . Her contribution to promote child protection and partipation is enormous.

We both were partners in a special program for combating child labour (IPEC) by ILO. Arunodhaya was involved in preventing child labour in Metal Industries in Chennai. Forming child study centres was part of Arunodhaya's strategy. This is the beginning in 1995.After this, formation of children's club and carving an independent arena for child participation became their unique feature. Their efforts culminated in the formation of Children Sangams in 2001 with a specific organizational structure and goals. It is heartening to see the impact of this initiative on the lives of children. The children are conscious of their rights and responsibilities. The Children sangams have now registered as a Confederation in 2001.

Arunodaya has touched the lives of thousands of children and has laid the foundation for a socially conscious citizens. At present,the children who were members have evolved as the leaders and have taken this message to the next generation.

A remarkable contribution.

My very best wishes to Virgil and her team of dedicated members. My appreciation and best wishes to all the members, representatives and leaders of Children Sangams.

I fervantly hope that these children will build an equitable society without discrimination.

**Ms.GIRIJA KUMARABABU**
**Former Hon.Secretary ICCW-TN**

# குழந்தை அமைப்புகளின் வாழ்த்துக்கள்

# வாழ்த்து மடல்

அன்பிற்குரிய அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் குழந்தைகள் அனைவருக்கும் விடியல் குழந்தை உரிமைகள் இயக்கத்தின் வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அருணோதயா குழந்தைகள் சங்கம் 20 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்த செய்தியை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தோம். கடந்த 20 ஆண்டுகளாக குழந்தை உரிமைகளுக்காக நீங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருவது பாராட்டுக்குரியது. இதன்மூலம் வடசென்னையின் புதிய அடையாளமாக அருணோதயா குழந்தைகள் சங்கம் விளங்கி வருகிறது என்றால் அது மிகையில்லை.

அருணோதயா குழந்தைகள் சங்கம், குடும்பம், பள்ளி, சமூகம் மற்றும் அரசு ஆளுகை ஆகிய அனைத்து தளங்களிலும் குழந்தைகளின் பங்கேற்பை நிலைநாட்டி வருவது குறித்து பெருமைப்படுகிறோம். அதிலும் குறிப்பாக, நாம் இணைந்து உருவாக்கிய பங்கேற்பு உரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு **(FCMRP)** தமிழகம் மற்றும் புதுவையில் தோன்றுவதற்கு நீங்கள் எடுத்த முன் முயற்சிகளுக்காக பாராட்டுக்களையும் உரித்தாக்குகிறோம். உங்களுடன் இணைந்து பயணிப்பதில் எமக்கு எப்போதும் மகிழ்ச்சியே!

இந்த 20 ஆண்டுகள் தொடர் பயணத்தில் ஏராளமான குழந்தைத் தலைவர்களையும், குழந்தை உரிமை செயல்பாட்டாளர்களையும் அருணோதயா குழந்தைகள் சங்கம் உருவாக்கியுள்ளது பெருமை கொள்ளும் சாதனையாகும். மேலும் சமூகப் புறப்பாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்ட அடித்தட்டுக் குழந்தைகளின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடி வருகிறீர்கள். இது எம்மைப் போன்று குழந்தைகளே, குழந்தைகளுக்காக, குழந்தைகளால் நடத்தப்படும் அமைப்புகளுக்கு பெரும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளிக்கிறது.

# வாழ்த்து மடல்

குழந்தைகளின் உரிமைகளையும், குழந்தைகளின் பங்கேற்பையும்
நிலைநிறுத்தகும் தங்களின் மகத்தான
பணியை என்றும் தொடர உளமார வாழ்த்துகிறோம்.

உங்களின் நாளைய வெற்றி புகழப்படும்
தடைகள் கூட அனுபவம் எனக்கொள்ளப்படும்
கிடைக்கும் அனைத்து வாய்ப்புகளிலும் வெற்றிபெற
எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்கள்!!

நடந்துபோகும் பாதையில் தடைகளைக் கண்டு தயங்கும்போது
கடந்து வந்த மைல்கற்களை நினைத்துப் பாருங்கள்
நீங்கள் பதித்து வந்த தடம் கண்டு வியந்து போவீர்கள்!!

தடைகளை படிக்கற்களாக்கி நீங்கள் சாதித்த சாதனைகள்
புதிய துணிவையும்
இலக்கை அடைய உத்வேகத்தையும் கொடுக்கும்
என்றும் வெற்றி உங்களுக்கே!!!

எப்போதும் குழந்தை உரிமைப் பயணத்தில் உங்களுடன்
இணைந்து பயணிக்க காத்திருக்கிறோம்.

**வாழ்த்துக்களுடனும், தோழமையுடனும்,**

**விடியல் குழந்தை உரிமைகள் இயக்கத்தினர்**
**மதுரை**

வணக்கம்,



வியாசர்பாடி பகுதியிலுள்ள குழந்தைகளாகிய எங்களின் உரிமைகளை புரிந்துக் கொள்ளுவதற்கும், எங்களுக்குள் மறைந்து கிடக்கும் தனித்திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கும், எங்களின் தலைமைத்துவ பண்புகளை மேம்ப்படுத்துவதில் ஆர்வம் குழந்தைகள் இயக்கங்கள் ஒரு சிறந்த தளமாக இருக்கின்றது.

அவ்விதமே அருணோதயா குழந்தைகள் இயக்கமும் மேற்சொன்ன பணியினை அவர்கள் பணிச்செய்யும் பகுதியில் சிறப்பாக செய்து வருக்கின்றார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. **FCMRP** கூட்டத்தில் கலந்துக் கொள்ளும் போது அருணோதயா குழந்தைகளின் பங்கேற்பு மிகவும் சிறப்பாக இருக்கும். அருணோதயா குழந்தைகள் இயக்கத்தின் முன்னெடுப்பால் தான் குழந்தைகள் இயக்கங்களின் பங்கேற்பு உரிமைக்கான கூட்டமைப்பு (FCMRP) உருவானது என்பதை நான் நன்கு அறிவேன். அதோடு அருணோதயா குழந்தைகள் இயக்கத்துடன் என்னுடைய தொடர்பு நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஆதனால் என்னுடைய தலைமைத்துவ பண்புகள் மேலும் வளர்ச்சி அடைய FCMRP ஒரு சிறந்த தளமாக அமைந்தது FCMRP கூட்டத்தில் பலதரப்பட்ட குழந்தைகளின் பிரச்சனைகள் என்ன, எங்களின் பார்வையில் அதற்கான தீர்வு என்ன என்பதினை கலந்து ஆலோசித்து முடிவெடுக்கும் போதும் எங்களின் கருத்துக்களுக்கு அங்கீகாரமும் மரியாதையும் கிடைத்தது.

இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள் என்பதிற்கு இணங்க மிகவும் சிறப்பாக பணியாற்றி 20ம் ஆண்டில் வெற்றி நடைப்போடும் அருணோதயா குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு பணி மென்மேலும் சிறக்க ஆர்வம் குழந்தைகள் இயக்கங்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

**S.கிஷோர்**
B.B.A 2nd year
ஆர்வம் குழந்தைகள் இயக்கம்

# குழந்தைகளின் படைப்புகள்

















# குழந்தைகள் பாதுகாப்பு

**முன்னுரை**

இச்சமூகத்தில் குழந்தைகளுக்கான பாதுகாப்புகள் இருப்பது போல் குழந்தைகளுக்கு எதிராக பல வன்முறைகள் இருக்கின்றன. எனவே இக்கட்டுரை குழந்தைகள் பாதுகாப்பு பற்றியும் குழந்தை பாதுகாப்பு சட்டத்தை பற்றியும் பார்க்கபோகிறோம்.

**சட்டப்பூர்வமான நடவடிக்கை**

முதலில் குழந்தைகளுக்கான உதவி தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது காவல் துறைக்கு தகவல் தெரிவியுங்கள் குழந்தைகளுக்கான உதவி தொலைபேசி தொடர்பின் மூலம் அவர்களுக்கான ஆலோசனை சட்ட உதவி ஆகியவற்றை தருவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். சமூகத்தில் ஆதரவை திரட்டுங்கள் தேவைபட்டால் மட்டும் கடைசி தீர்வாக பத்திரிகைகளை தொடர்பு கொள்ளுங்கள் சட்டங்களை தெரிந்து வைத்து கொள்ளுங்கள் சட்டங்களைப் பற்றி தெரிந்து வைத்திருந்தால் இவர்களையும் வலியுறுத்தவும் வாதாடி ஒப்புக்கொள்ள வைக்கவும் பெரும் உதவிகரமாக இருக்கும்.

**குழந்தை திருமணம்**

குழந்தை திருமண தடுப்புச்சட்டத்தின் படி 21 வயதிற்கு குறைவான ஆண் 18 வயதுக்கும் குறைவான பெண் ஆகியோருக்கு நடக்கும் திருமணம் குழந்தை திருமணம் ஆகும். சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரம்பு மீறி நடத்தப்படும் திருமணங்கள் சட்டத்திற்கு புறம்பானதாக ஆகும். எனவே முயற்சி எடுத்து குழந்தை திருமணங்களை நிறுத்தி அவை அங்கீகாரம் பெறுவதை தடுக்க வேண்டும்.

**குழந்தை தொழிலாளர் முறை**

பெற்றோர் அல்லது பாதுகாவலர் என யாராக இருந்தாலும் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் குழந்தை தொழிலாளர்களாகவும் ஒப்பந்த தொழிலாளர்களாகவும் அடமானம் வைப்பது போன்ற சட்டத்திற்கு புறம்பான வேலைகளை யார் செய்தாலும் குழந்தைதொழிலாளர் சட்டத்தில் இடம் பெற்றுள்ள தண்டனைகளை அவர்கள் பெறுவார்கள்.

**கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு சட்டம் 1976**

வாங்கிய கடன் தொகைக்காக குழந்தைகளை கொத்தடிமைகளாக வேலை செய்ய வைப்பதை இந்த சட்டம் தடை செய்கிறது. கொத்தடிமையாவற்கு காரணமாக இருந்த எல்லாவிதமான கடன் ஒப்பந்தங்கள் மற்றும் பிற ஒப்புதல் விவரங்கள் போன்றவை இந்த சட்டத்தின் படி செல்லாததாகக் கருதப்படும். கொத்தடிமை முறையில் வேலை செய்யும் படி யாரையும் வற்புறுத்துவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

இம்மாதிரியான தங்களது குழந்தைகளை பிற குடும்ப குழந்தைகளை கொத்தடிமை முறைக்கு உட்படுத்தும் பெரியோர்களும் சட்டத்தில் உள்ள தண்டனைக்கு உரியவர்கள் ஆவர்கள்.

**முடிவுரை**

குழந்தைகளுக்கான சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்தினால் தமிழ்நாட்டில் குழந்தைகள் அனைவரும் பாதுகாப்புடனும் அவர்களின் நிலைத்த முன்னேற்றத்தின் படியும் அவர்கள் கல்வித்தகுதியில முன்னேற்றமடைந்து நம் நாட்டிற்கு பெருமை சேர்த்திட முனைவார்கள்.

எஸ்.காவியா
8ம் வகுப்பு
இராஜாஜி நகர்

## சாதனை குழந்தைகள்

அடுப்பாங்கரையில் கண்ணீர்விட்ட நாங்களே
அடுத்த வெற்றிப்பாதையில் பயணித்தவர்களும் நாங்களே
விசித்திர உலகில் எங்கள் சாதனை உலகத்தையே வசியம் செய்தது
உலகத்துடன் எங்கள் சாதனை உலகத்தையே பார்க்க செய்தது
எத்தனையோ சாதனை
சாதனைக்கும் சாதனையாக
விண்வெளிவரை
விடியலை நோக்கி பறப்போம்
நாங்கள் குழந்தைகளே

**வி.சுஜிதா**
13 வயது, 8 ஆம் வகுப்பு
தமிழர் நகர்

## குழந்தை தொழிலாளர்கள்

வாழ்க்கையின் வாயிலிலே
சுமைதாங்கியாக மாறினோம்
இடிதாங்கிபோல்
வலி தாங்கிய இதயம்

இருட்டான வாழ்க்கையில்
தீக்குச்சியாய் கூட எவரும் இல்லை
துன்பமும் துயரமும் தோழர்கள் ஆகிப்போனது
கல்வி என்றுமே கனவாகி போனது
இன்பம் என்ற ஒன்று இல்லாமலே போனது

கனமான இதயத்தின் ஆசைகளும்
ஈரமான இமைகளின் கனவுகளும்
ஒரு நாள் நிஜமாக்க காத்திருக்கிறோம்
மனித நேயம் மறந்த சமூகத்தில் ...

அன்புடன்

**கே.யாஸ்மின் நிஷா**
13 வயது, 8 ஆம் வகுப்பு
கொருக்குப்பேட்டை

# மலரும் நினைவுகள்





## நந்தவனம்

அருணோதயா என்னும் நந்தவனத்தில் நாங்கள்
பூத்துகுலுங்கும் சின்னஞ்சிறு குழந்தைகள் சங்க குழந்தைகள் நாங்கள்
அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகள் நாங்கள்

எங்களுக்கு உரிமை என்ற நீரூற்றி
வளர்ச்சி என்ற உரம் போட்டு
பாதுகாப்பு என்ற வேலியாக நீங்கள்
பங்கேற்பு என்ற வண்ண மலர்களாய்

உங்கள் நந்தவனத்தில் பூத்து குலுங்கும் பூக்கள் நாங்கள்
நாங்கள் இன்று அனைத்து உரிமைகளும் பெற்று
மகிழ்ச்சியாக வாழ்கின்றோம்.
குழந்தைகளின் பங்கேற்பை உறுதி செய்வோம் ....

ஜே.தர்ஷினி
17 வயது, 10ம் வகுப்பு
நேரு நகர்

## மலர்வதற்குள் உதிர்ந்த மொட்டுகள்



ஒரு செடியில் பூக்கள்
பூ பூத்து உதிர்ந்துவிடுகின்றன
அதேபோல் என் வாழ்க்கையும்
ஒரு செடி போல் தான்
செடியாக நான் இருக்கின்றேன் ஆனால்
என் கனவுகள் அந்த மலர்கள் போல்
தினந்தோறும் பூத்து மடிந்துவிடுகின்றன.
புத்தகம் சுமக்க வேண்டிய வயதில் நான்
ஸ்டீல் பட்டறையில் பாத்திரங்களை சுமக்கின்றேன்.
கணக்கு போட்டு பழக வேண்டிய என் பிஞ்சு விரல்கள்
தீப்பெட்டி அட்டைகளை அடுக்கி கொண்டிருக்கின்றன

வி.பிரவீன் குமார்
13 வயது, 9ஆம் வகுப்பு
ஜீவா நகர்

## வேண்டும் குழந்தைகள் சங்கம்




வேண்டும் வேண்டும் குழந்தைகள் சங்கம் வேண்டும்
மீண்டும் மீண்டும்  குழந்தைகள் சங்கம் வேண்டும்
குழந்தைகள் சங்கம்  இருந்தாலே - உலகினில்
குழந்தைள் உரிமைகள் காத்திடுமே .. அருணோதயா
குழந்தைகள் சங்கம் இருந்தாலே  குழந்தை - உரிமைகள் காத்திடுமே

பள்ளி கூடம் போகணும் - பாடங்களை  படிக்கணும்
நாளைய உலகில்  நாம் சிறந்த தலைவர்கள் ஆகனும் –குழந்தைகள் சங்கம்
இருந்தாலே குழந்தைகள் பங்கேற்ப்பு கிடைத்திடுமே
வேண்டும் வேண்டும் குழந்தைகள் சங்கம் வேண்டும் –மீண்டும் மீண்டும்
குழந்தைகள் சங்கம் வேண்டும் .

நாம் பாதுகாப்பாய் வாழ்ந்திடனும் –குழந்தை வன்முறையை தடுத்திடனும்
பல சாதனைகள் புரியணும் சமூகத்தில் சிறந்த மதிப்பையும் பெற்றிடணும்
குழந்தைகள் சங்கம் இருந்தாலே குழந்தைகள் பாதுகாப்பு கிடைத்திடுமே
வேண்டும் வேண்டும் குழந்தைகள் சங்கம் – மீண்டும் மீண்டும்
குழந்தைகள் சங்கம் வேண்டும் .

M.தருண்
**13 வயது, 9 ஆம் வகுப்பு**
**கொருக்குப்பேட்டை**




## Children's Right poem

Children are the shareholders of happiness
Happiness depends on the dreams and rights
Children life should be filled with opportunities
Not with opposition

Break the chain that breaks children’s dream .
Children’s right makes our world bright
Let them enjoy their childhood.

S. Mahalakshmi
Age 18, B.Com 1st Year
Thiruvottyur


அருணோதயா
சுரேந்திரன்
14/10/2021

# பங்குதாரர்களின் பாராட்டுக்கள்

# வாழ்த்து மடல்



இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவின் தூண்கள் சமுதாயத்தில் பொருளாதரத்தை காரணம் காட்டி குழந்தைகள் வளமிழப்பதை தவிர்க்கவும். இந்தியாவின் வலிமை மிகுந்த தூண்களாக மாற்றத் தேவையான தன்னம்பிக்கையும் தரமான கல்வியையும் தந்த பெருமை அருணோதயா குழந்தைத் தொழிலாளர் மையத்தையே சாரும்.

நெஞ்சைச் தொட்டு சொல்லுங்கள் நாம் அன்றாடம் எவ்வளவு குழந்தை தொழிலாளர்களை கடந்து சென்றுள்ளோம்.

கண்ணா மூச்சி விளையாடும் நேரத்தில் கண்ணுரங்க நேரமில்லாது உழைக்கும் – இந்த பிஞ்சு உள்ளங்களைக் கண்டறிந்து அவர்களுக்கு அறிவுக் கண் திறக்க அயராது உழைக்கும் அருணோதயா குழந்தை தொழிலாளர் மையத்திற்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள் !

இளம் –பிஞ்சுக்களை பந்தாட நினைக்கும் வஞ்சகர்களிடம் தன்னை எவ்வாறு தற்காத்து கொள்ள வேண்டும் என்பதை சமுதாயத்தில் பொருளாதரத்தில் பின் தங்கிய குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் தன்னம்பிக்கை ஊட்டி பல குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றி கொண்டிருக்கும் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு 20 ஆண்டில் அடியெடுத்து வைத்து மென்மேலும் இவர்கள் பணி சிறக்க வாழ்த்தும் அன்புள்ளம்

நலம் சிறக்க - நலமுடன்
பணி சிறக்க – பணியுடன்
பண்பாடும் சிறக்க – வாழ்த்தும்

அன்புள்ளம்

A .எழிலரசி ஆறுமுகம் Ex. MC
Msc Bed, M,phil. BL
Ex. சென்னை மாநகராட்சி வார்ட் -1



திருமதி . S . சாருலதா
தலைமை ஆசிரியர்
திருவொற்றியூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி
ஆல் இந்தியா ரேடியோ நகர்
எண்ணூர், சென்னை -57

உதவி வரைத்தன்று உதவி – உதவி
செய்யப்பட்டார் சார்பின் வரைத்து – திருக்குறள்

உலகில் பிறந்தததது உதவுவதற்கே என்பதை அறிந்து நாம் வாழ வேண்டும் .

பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது – திருக்குறள்

ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலை விடப் பெரியதாகும் என்ற குரலுக்கு ஏற்ப நமது பள்ளிக்கு அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம் கடந்த 10 ஆண்டுகளாக பல்வேறு உதவிகளை செய்து வந்துள்ளனர். அவர்கள் பணி சிறக்க எங்களது பாராட்டுக்கள்

“ஞானம் நல்லறம் வரும் சுதந்திரம் நற்குடி பிறப்பு “என்ற புதுமை பெண்களுக்கான இலக்கணம் உள்ளது. பெண் கல்வி குறித்து விழிப்புணர்வுஏற்படுத்தினார்கள். பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்தும், பூப்பெய்தும் பெண்கள் சுத்தமாகவும் ,சுகதாராமாகவும் உடலை பேணுதல் குறித்து மாணவியருக்கும், பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கினார்கள்.

மாணவர்கள் தங்கள் கைகளை நீர் மற்றும் சோப்புகொண்டு கைகளை கழுவும் முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

பள்ளி மாணவர் மன்றம் துவங்கி பள்ளிகளில் குழந்தைகள் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் குழந்தைகள் பங்கேற்ப்பு குறித்து குழந்தைகளுக்கு பயிற்சி அளித்தனர்.

குழந்தைகளின் திறமையை வளர்த்திட பறையாட்டம், பரதநாட்டியம் போன்ற கலைகளில் பயிற்சி கொடுத்தது.

பள்ளி குழந்தைகளுக்கு வாழ்வதற்கான உரிமை,வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்பு உரிமை, பங்கேற்பு உரிமை குறித்து பள்ளி குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பள்ளி குழந்தைகள் மன்றம் கல்விக் குழுவில் உள்ள குழந்தைகள் பள்ளியில் நூலகம் துவங்கியது பயனுள்ளதாக இருந்தது, கொரனாவை வென்று காட்டுவோம் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தியது சிறப்பாக இருந்தது .

அருணோதயா குழந்தைகள் சங்கம் சிறந்த செயலாற்றி வருகிறது.

அருணோதயா குழந்தைகள் சங்கம் துவங்கி உ0 வருடம் முடிவடைந்த நிலையில் அதை கொண்டாடும் விதமாக பள்ளியில் மரங்களும் நட்டுள்ளனர்.

இன்னும் பல ஆண்டுகள் அருணோதயா குழந்தைகள் சங்கம் செயலாற்றி குழந்தைகள் அனைவரும் அனைத்து உரிமைகளும் பெற்று வாழ வேண்டும் என வாழ்த்துகிறோம்.



அருணோதயா குழந்தைகள் சங்கம் தொடங்கி இருபது வருடம் முடிவடைந்துள்ளது என்பதை கேள்விப்பட்டு மிகவும் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த அமைப்போடு இணைந்து செயலாற்றுவதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன் .இது எனக்கு கிடைத்த அரிய வாய்ப்பாகவே நான் கருதுகிறேன். இவ்அமைப்பின் செயல்பாடுகள் மிகவும் துல்லியமாகவும் நேர்த்தியாகவும் கடின உழைப்போடும் அமைந்திருக்கும். இவர்களின் திட்டங்கள் அனைத்தும் தொலைநோக்குப் பார்வை ஆகவே அமைந்திருக்கும். இவ்வமைப்போடு இணைந்து நான் பல செயல்பாடுகளை செய்து வருகிறேன். குறிப்பாக குழந்தைகளின் அடிப்படை உரிமைகளைப் பெற பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று, நிகழ்ச்சி சிறப்பாக அமைவதற்கும் செயல்படுவதற்கும் உறுதுணையாக இருந்து உள்ளேன் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். இவ்வமைப்பில் உள்ள மாணவர்கள் குறிப்பாக கல்வியில் சிறந்து விளங்க பெரும் பங்கு வகித்து வருகின்றனர்.

எங்கள் பள்ளியில் இளவயது திருமணம் நடப்பதை தடுத்து நிறுத்தி உள்ளனர். ஒவ்வொரு வாரமும் குறிப்பாக ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு தன் சுத்தம் நல்ல தொடுதல், தீய தொடுதல், நன்னடத்தைகள், சமுதாய விழிப்புணர்வு இவை அனைத்தை பற்றியும் எங்கள் மாணவர்களுக்கு மிகத்துல்லியமாக வகுப்புகள் நடந்து வருகிறது. பள்ளி மாணவர்கள் இந்த அமைப்பின் மூலம் நடைபெறும் ஆலோசனை. கல்வி வழிகாட்டுதல்,மாலை நேர வகுப்பு போன்றவற்றை பள்ளி சார்பாக அடிக்கடி மாணவர்களுக்கு சிறப்பான செயல்பாடுகள் நடத்தி வருகின்றனர். ஏழை மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கியும்,அவர்களின் பெற்றோரிடம் தொடர்ச்சியாக தொடர்பு கொண்டு மாணவர்களின் படிப்புத் தொடர்பாகவும், வாழ்க்கையின் புரிதலையும் விளக்கி வருகின்றனர்.

எங்கள் பள்ளியில் குறிப்பாக சில மாணவர்கள் போதைக்கு அடிமையாகி விடுகின்றனர் அவர்களை நாங்கள் அடையாளம் காட்டியதுடன் மிகவும், பரிவுடனும் அவர்கள் வீட்டிற்குச் சென்று அந்த மாணவனுக்கு ஆலோசனைகள் கொடுத்தும் தொடர்ச்சியாக அந்த மாணவனை கண்காணிக்கவும் செய்கின்றனர். படிப்பில் நாட்டம் பெற அனைத்து வழிவகை செய்து அம்மாணவனின் வாழ்க்கையில் ஒளியேற்றி வருகின்றனர். இவர்களின் சேவை என்றென்றும் தேவை எங்களை போன்ற பல பள்ளிக்கு .

அன்னைக்கு நிகர் அருணோதயா "என்று கூறுவதில் நாங்கள் மிகவும் பெருமிதம் கொள்கிறோம். இவ்வமைப்பு சீரும் சிறப்புமாக வளர்ந்திட எங்கள் பள்ளியின் அனைத்து ஆசிரியர்களின் சார்பாக வாழ்த்துக்கள்.

**திரு, வெங்கடேசன்**
**உதவி தலைமை ஆசிரியர்**
**சென்னை மேல் நிலைப்பள்ளி ( பட்டேல் நகர்)**

# முன்னாள் பணியாளர்கள் வாழ்த்துக்கள்



# யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

"வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார் அடிகளார். பயிர்களை கண்டு வாடிய அவர் மனம் இந்த கலியுகத்தில் இருந்திருந்தால் குழந்தைகளின் நிலைக்கண்டு இரணமாகியிருக்கும் அவரது இதயம்!

ஆம் மழலைகளுக்கு இழைக்கும் வஞ்சனைகள், "வன்கொடுமைகளிலிருந்து யாராவது குழந்தைகளைக் காக்க வேண்டுமல்லவா? மழலைகளின் மனம் மக்கி போகாமல் மணம் வீசவேண்டுமல்லவா? குழந்தைகள் குழந்தைகளோடு குதுகலித்து கும்மாளம் போட வேண்டுமல்லவா? அவர்களின் சிந்தனைகள் சிகரத்திலும், அங்கம் ஆரோக்கியத்திலும் நிலைத்திருக்க வேண்டுமல்லவா? "குழந்தைகள் குழந்தைகளாக வாழவும், அவர்களின் தேவைகளை அவர்கள் அனுப்பவிக்கவும், பாதுகாப்புடன் வாழவும்" வழிகளையும், வாய்ப்புகளையும் உருவாக்க வந்தார். "கைவிளக்கு ஏந்திய காரிகை" ஒரு நிமிடம்! நான் கூறியது ஃப்ளோரன்ஸ் நைட்டிங் அம்மையாரை அல்ல! "அருணனின் உதயத்தை" "அருணோதயா" என்னும் "சூர்யபிழம்பை".

1992-ம் ஆண்டு உதயமான அருணோதயா நிறுவனம் "குழந்தைகளை தொழிலிருந்து மீட்டெடுத்து குழந்தைகள் தங்கள் உரிமைகளைப் பெற்று வாழ்ந்திட வேண்டும்" என்ற முனைப்புடன் முழுவீச்சுடன் செயல்பட தொடங்கியது. இந்த முனைப்பில் ஓர் அங்கமாய், அருணனின் தீம்பிழம்புகளில் ஓர் பிழம்பாய் இணைந்து செயலாற்றியதில் நான் நிறைவடைந்திருக்கிறேன். 1994-ஆம் வருடம் அருணோதயாவில் இணைந்து என் இளமைக் காலங்கள் அனைத்தும் ஓர் ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபட்டுள்ளேன் என்பதை நினைக்கும் போது நிறைவடைந்திருக்கிறேன். அந்த நிறைவுகள் பலவாக இருப்பினும் அதில் ஒன்றுதான் "அருணோதயா குழந்தைகள் சங்கம்"

ஐ.நா.சபையின் "குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை சாசனத்தில்" எடுத்துக்காட்டப்பட்ட "அனைத்து உரிமைகளை அனைத்து குழந்தைகள் அடைந்திடவும், அதில் குழந்தைகள் பங்கேற்றிடவும்" பல தொடர் செயல்பாடுகளின் விளைவாக 2001-ல் உருவான குழந்தைகள் சங்கம் இன்று 20-ஆம் வருட கொண்டாட்டத்தில் உள்ளது என்பதைக் காணுகையில் மிக்க மகிழ்ச்சி. இச்சங்கத்தை வழிநடத்தும் திட்ட அதிகாரியாகவும், பங்கேற்பு உரிமை ஆலோசகராகவும் நான் பணியாற்றியத்தில் கூடுதல் மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சிக்கு முதல் தளமாக அமைந்த அக்பராபாத் பகுதி குழந்தைகளை பாராட்டியே ஆக வேண்டும். அவர்களின் தேவைகளை நன்கு உணர்ந்து பகுதி மக்கள் ஒத்துழைப்போடு செய்த செயல்பாடுகள் மற்ற குழந்தைகள் சங்கத்திற்கு முன் உதாரணமாகவும், வீரியத்தையும் ஏற்படுத்தியது என்பது சங்கத்தின் வலுவான அஸ்திவாரம்.

**சமூக பார்வையும, சங்கத்தின் நிலைப்பாடும்**

"எங்களுக்கே உரிமை இல்லை" இதில் குழந்தைகள் உரிமை? பங்கேற்பு? என்று ஏளனமும், எகத்தாளமும் இந்தக் கூட்டங்களை புரட்டி போட்டது குழந்தைகள் சங்க செயல்பாடுகள், பணிகள் "உண்மையாகவும்", "நேர்மையாகவும்" செய்யும் போது அந்த ஆண்டவரே நம்முடன் இணைந்து வழிநடத்துவார் என்பதற்கான சான்றுதான் இந்த சங்கம். இதை எழுதும் போது எனக்கு மகாகவி பாரதியார் கூறிய ஒரு கவிதை நினைவில் நிழலாடுகிறது.

எவரையும் வெற்று காகிதம்
என ஒரு போதும் எண்ணாதே;
ஒரு நாள் அவர்
பட்டமாய் பறப்பார்;
நீயும் அண்ணாந்து தான்
பார்க்க வேண்டும்:"

ஆம் பாரதியின் கூற்றிற்கு ஏற்றார்போல் சங்க செயல்பாடுகள் யாரையும் அண்ணாந்து தான் பார்க்க வைத்தது. குழந்தைகளுக்குள் நல் மாற்றத்தையும், அவர்களை சார்ந்த குடும்பம், பள்ளி, சமூகம், அரசு என அனைத்துத் தளங்களில் மாற்றங்களை உருவாக்கி அனைவரையும் அண்ணாந்துதான் பார்க்க வைத்தது. ஏன்? நிறுவனத்திற்கும், மற்ற நிறுவனத்திற்கும் ஒரு மலைப்பைதான் தந்தது என்பது நிதர்சன உண்மை. அதற்கான சான்றுகளும் உள்ளன.

இந்த ஆக்கப் பூர்வமான செயல்பாடுகளின் தாக்கமாக குழந்தைகளின் தேவைகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்க பங்கேற்புரிமைக்கு வரவேற்பும், பாராட்டும் தொடர்ந்து கொண்டிருந்தது "பங்கேற்புரிமைக்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு" மாநிலளவில் தொடங்கவும், மற்ற "மாநிலங்களில் குழந்தைகள் சங்கம் உருவாகவும்", அதில் "பங்கேற்புரிமையை" முன்னெடுத்து செயல்படவும், செயலாக்கும் விதம் குறித்து அறிந்து பின்பற்றவும் முன் உதாரணமாக அருணோதயா குழந்தைகள் சங்கம் இருந்தது என்பதை மறுக்க முடியாது. இது பங்கேற்புரிமை செயலாக்கத்திற்கு கிடைத்த வெற்றியே!

தன் குடும்பத்தினர், பகுதி பெரியோர்கள், பள்ளி ஆசிரியர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் பிற அமைப்புடன் சுமூகமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு தங்கள் உரிமைகளை கேட்டு பெறுவதற்கான சூழலை தக்க வைத்து கொண்டதும். இந்த "பங்கேற்புரிமை செய்லபாடுகளுக்கு கிடைத்த வெற்றியே".

### பெரியோர்களின் கவனத்திற்கு

குழந்தைகள் பங்கேற்பு உரிமை சட்டமாகவும், சாசனமாகவும் காகிதம் சொல்லும் வெறும் எழுத்துக்களாகவும் மட்டும் இருக்கக்கூடாது. இவ்வுலகம் அழகானதுதான். ஆனால் அபாயமானவர்கள் மத்தியில் நாம் வாழுகிறோம் என்பதையும், இதில் குழந்தைகள் தைரியமுடன் தன் கருத்துகளை வெளிப்படுத்தவும், அவர்கள் உரிமைகளுடன் வாழும் சூழல்களை கேட்டு பெறுவதற்கான தகவலமைப்பை ஏற்படுத்தவும் பெரியோர்களாகிய நாம் உணர வேண்டும், மற்றவர்களை எந்த விதத்திலும் பாதிக்காமல் குழந்தை உரிமை பெறுவது குறித்து வழிகாட்டல் அவசியம்."ஊரு கெட்டு போச்சு" "நாடு கெட்டு போச்சு" என்று புலம்புவதை விட்டு நம் குழந்தைகளுக்கும் நம்மை சார்ந்த குழந்தைகளுக்கும் "குழந்தை உரிமை மற்றும் பங்கேற்பு குறித்து புரிதல்" ஏற்படுத்துங்கள், வழிகாட்டுங்கள், சக குழந்தைகளையும், பெரியோர்களையும், அவர்களின் கருத்துக்களையும் மதிக்க கற்று கொள்வார்கள். ஊரும், நாடும் நலம் பயக்கும்.

### சுலபமா? சாத்தியமா?

மிகவும் சுலபம்! ஆம்! யாருக்கு சுலபம்? இந்த உதாரணம் தெளிவாக்கும் என நினைக்கிறேன். எந்தெந்த விளைநிலங்களில் எந்தெந்த விதைகள் விதைக்கப்பட வேண்டும், எவ்விதம்? எப்போது? விதையிட்டு நீர்பாய்ச்சி உரம்இட வேண்டும், அறுவடை செய்ய வேண்டும் என்பதை நல்ல விவசாயி அறிவார். அதுபோல களத்தில் குழந்தைகள் உரிமைகள் மற்றும் பங்கேற்புரிமை குறித்த பணிகளை முன்னெடுக்கும்போது ஒருவருக்கு பட்டமும் பதவிகளும் தேவையில்லை. ஒரு வருடம் பயிற்சி எடுத்தாலும் முழு பயன் இல்லை.

"பங்கேற்பு உரிமை" குறித்த புரிதல் அவசியம். எந்தெந்த தளத்தில் எவ்விதம் பங்கேற்புரிமை நிலைநாட்ட முடியும், அதற்கான சூத்திரங்கள், யுக்திகளை முன்கூட்டியே ஆராய்ந்திட வேண்டும். குழந்தைகளின் திறன், திறமைகள், அவர்களின் நிலைபாட்டை நன்கு உணர்ந்து அதற்கேற்றார் போல் நாம் செயல்களை மேற்கொள்ள வேண்டும், என்னென்ன தாக்கங்கள் ஏற்படவேண்டும் என்பதை உணர்ந்து திட்டமிட வேண்டும் அத்திட்டங்களில் புதுமைகளை புகுத்தி செயலாற்றும் போது உண்மையான வெற்றியை ருசிக்க முடியும். காலம் கடந்தும் பறைசாற்றும் என்பது நான் கண்ட கள அனுபவம். இதை எழுதும் போது பழமொழி ஒன்று நினைவில் வருகிறது.

"சட்டியில் இருந்தால்தான்
அகப்பையில் வரும்"


-எதையும் நாம் தெளிவாக புரிந்து கொள்ளுதல், நம் புத்தியில், எண்ணத்தில் புதுமை இருத்தல் நாம் உண்மையாகவும், ஆர்வமாகவும் செயலாற்றுதல் வேண்டும். என்ன? இது சுலபம் தானே! இதன்படி இருந்தால் எல்லாம் வெற்றிதானே! ஊரும், நாடும் நன்றாக இருக்கும். பாரதியின் கூற்று அனைத்து தளங்களுக்கும் சொந்தமாகியிருக்கும். வள்ளலார் வந்தாலும் அவர் மனம் குளிர்ந்திருக்கும்.

சங்கத்தை பற்றி கூறிய நான் நிறுவனத்தின் தலைமையை கட்டாயம் புகழப்படத்தான் வேண்டும்.

“பதவி வரும் போது பணிவும் வரவேண்டும்
துணிவும் வர வேண்டும் தோழி;
பாதை மாறாமல் பண்பு குறையாமல்
பழகி வரவேண்டும் தோழா; -

என்ற பாடல் வரிகளுக்கு திருமிகு.வர்ஜில் டி'சாமி அவர்கள். அவரிடம் நான் பணியாற்றிய தருணத்தில் பணியின் சுமை தெரியாது. நம் வீட்டு விசேஷங்களை எவ்வாறு ஆர்வமுடன், ஈடுபாடுடன் செய்வோமோ அதே சூழல்தான் என்னில் நிலைத்தது. சங்கம் சார்ந்தோ, நிறுவனம் சார்ந்தோ எந்த திட்டங்களும், செயல்களும் எனது விருப்பமே. அவரிடம் எனக்கு கருத்து சுதந்திரம், பணி சுதந்திரம் கிடைத்தது. அதனால்தான் நான் இடையூறுகளை களைந்து வெற்றி பெற முடிந்தது. பல வெளியூடுகளை வெளியிடவும் முடிந்தது. “ரம்யா நாளைக்கு லீவு எடுத்து ரெஸ்ட் எடு என்று கூறும் இயக்குநரை பார்க்க முடியுமா? அந்தளவிற்கு எங்களுக்குள் புரிதல், உண்மை இருந்தது. அதனால், 20 ஆண்டுகள் வெற்றிகரமாக பணிகளை மேற்கொள்ள முடிந்தது.

என்னுடன் இணைந்து பணியாற்றிய பணியாளர்களையும் பாராட்டியே ஆக வேண்டும், வயது வித்தியாசம் பாராமல் என் உழைப்பையும், உண்மைதன்மையையும், ஆர்வத்தையும் கண்டு என்னுடன் தோள் கொடுத்து சூழலைப் புரிந்து நேரம் பாராமல் பணியாற்றியவர்களை மறக்க முடியாது, இவர்கள் அனைவரையும் நிகழ்வுகளையும் நினைவில் மறுமுறை படம் பிடிக்க வைத்த அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் 20-ஆம் ஆண்டு விழாவிற்கு என் வாழ்த்துகள்.




**கி.ரம்யா**
முன்னாள் ஆலோசகர் -
குழந்தைகள் பங்கேற்பு

## TOUCHED, OVERWHELMED WITH JOY AND THANKFUL



This 20 years journey of children sangam was not an easy path. With the strength of Arunodhaya, CACS was able to overcome many barriers and achieve it's goal on child participation and child right. Today we are able to see the fruit of the continuous work Arunodhaya did in the community. I wish all children who were part of this bountiful journey all success in their future endeavors. In this time I am also thankful to staff members and stakeholders for their immense support to bring child participation into reality in North Chennai. Keep going inspiring and changing many many lives. Let the journey begin.


**Ms. S. Suganthi**
Former Programme Officer
CSR Consultant Altimetrik

## வாழ்க பல்லாண்டு

“மொட்டாக இருந்து
அரும்பாக வளர்ந்து
மலராக மணம் வீசிய
குழந்தைகள் சங்கம்”

“உந்தன் சிந்தனையாலும்
செயல்களாலும் மாநாடுகள் பல நடத்தி – அரசுக்கு
குழந்தைகள் உரிமைகளுக்காக
கொடுத்த செல்வங்களே

20 ஆண்டுகளாக நீங்கள்
சாதித்த சாதனைகள்
எத்தனையோ! எத்தனையோ!!
இன்னும் சாதிக்கவும், பிரகாசிக்கவும் செய்து
வாழையடி வாழையாக வளர வாழ்த்துகிறேன்.
வாழ்க பல்லாண்டு!





**திருமதி. மனதா குமார்**
முன்னாள் கல்வி திட்ட அதிகாரி
அருணோதயா

# பூக்களின் பயணம்...



வாழ்த்து மடல்

அருணோதயா எனும் நந்தவனத்திலே
வானவில்லின் வண்ணங்களாய்
சிறகடித்து பறக்கும் வண்ணத்துப் பூச்சிகளே!
இங்கு ரீங்காரமிடும் வண்டுகள் உண்டு.
பாடல் இசைக்கும் குயில்கள் உண்டு
நடனமாடும் மயில்களும் உண்டு - கவி
இயற்றும் நம்புலவர்களும் உண்டு
எட்டுத்திசையும் கொட்டும் முரசாய்
குழந்தை உரிமைகளை பறைசாற்றும்
பட்டிமன்ற பேச்சாளர்களும் உண்டு !!

வாழும் உரிமையை நிலைநாட்டி
வளர்ச்சிக்கான பாதையை உருவாக்கி
பாதுகாப்பாய் வாழ வழிகாட்டி - உங்களின்
பங்கேற்பு உரிமையை எடுத்துக்காட்டி
குழந்தைகள் சங்கங்களின் வாயிலாய்
குழந்தை உரிமைகள் கொள்கையை
அனைவரும் அறிந்திட வழிவகுத்தீர் !!!

பாருக்குள்ளே நல்ல நாடாம் - நம்
பாரதநாட்டில் - இன்றைய
குழந்தைகளே நாளைய தலைவர்கள்
என்பதனை நாடாளும் நல்லோர் அறிந்திட
"குழந்தைகள் நகர சபையை" தோற்றுவித்து
பங்கேற்பு உரிமை வாயிலாய் - பற்பல
பயிற்சிகளில் பங்கெடுத்து - இன்று
இளைய தலைவர்களாய் வழிநின்று
ஏற்றமிகு சமூகத்தை படைத்திட
எங்களுக்கும் வாய்ப்புகள் வழங்குங்கள் என

"குழந்தைகளுக்கு உகந்த மாநகராட்சியில்"
நகரமன்ற உறுப்பினர்களாய் - வலம்வரும்
சாதனையாளர்களே ! உங்களின் சாதனை
செடியில் பூக்கும் மலரைப் போன்றதல்ல
ஒருநாளில் பூத்து உதிர்ந்துவிட - அது
வானில் இருக்கும் நட்சத்திரம் போன்றது
வானம் இருக்கும் வரை ஜொலிக்கும் !!!

எங்களுக்கு நீங்கள் நாங்களே - என
எங்களுக்கு எடுத்துச் சொல்லி - அருணோதயா
குழந்தைகள் சங்கத்தின் இருபதாம் ஆண்டின்
நிறைவு விழாவில் அடியெடுத்து வைக்கும்
குழந்தைகள் சங்க குழந்தைகளே !
வாழ்க பல்லாண்டு என வாழ்த்துகிறேன்

இமயமலையின் எவரெஸ்ட் சிகரமாய்
வானைத்தொடும் மேகங்களாய்
மண்ணுலகில் உங்கள் புகழ் சிறக்க
தடைக்கற்களை படிக்கற்களாய்
தோல்விகளை தோல்வியுறச் செய்து
வெற்றி எனும் பாதையில்
அனைத்து குழந்தைகளையும்
மாண்போடும் மகிழ்வோடும்
வாழ வழி வகைச் செய்வீர் ! செய்வீர் என
வாழ்த்து மடல் பாடி உங்களை
வாழ்த்துகிறேன் - வாழ்க வளமுடன்
வாழ்க பல்லாண்டு ! வாழ்க வாழ்கவே ! 999

சு. சித்ரா
முன்னாள் திட்ட அதிகாரி
அருணோதயா
குழந்தைகள் நலக்குழு உறுப்பினர்
சென்னை தெற்கு

# மண்ணில் விழுந்த விதைகள்

மண்ணில் விழும் விதைகள் விருட்சமாகும்
அருணோதயா என்னும் நந்தவனத்தில் விதையாய்
விழுந்த குழந்தைகள் விருட்சமானார்கள்
இருபதாம் ஆண்டுவிழாவினைக் கொண்டாட !

பட்டறைக்குள் சிறையிருந்த குழந்தைகளை மீட்டெடுத்து
கல்வி என்னும் அறிவுக்கண் திறந்து
குழந்தைகளின் திறமை குழந்தைகளுக்கு புரியவைத்து
பயிற்சிகள் பல தந்ததால் பயனடைந்தோர் பல்லாயிரம் !

பயிற்சிகள் பல பெற்றதினால் மேடை பல ஏறி
புகழ்பெற்ற குழந்தைகள் தான் ஏராளம் ஏராளம்
ஏறிய மேடைதனில் குழந்தைகளின் சாதனைகள்
அனைத்தும் உனக்கு கிடைத்த புகழாரம் !

தான் பெற்ற இன்பம் தனக்கு மட்டுமல்ல என்று
மழையின் போது குடையாகவும் கடும் வெய்யிலின் போது
மரமாகவும் நிழல் தந்து ஆதரித்ததால்
மகிழ்ந்த குழந்தைகள் எத்தனை எத்தனை!

குழந்தைகள் பட்டாம் பூச்சியாய் சிறகடித்து
எட்டாத சிகரத்தையும் ஏறி பிடித்து சாதனை படைக்க செய்த
அருணோதயா குழந்தைகள் சங்கம் இது போன்று மேலும் பல
நூற்றாண்டு விழா காண வாழ்த்துகின்றேன்.

அருணோதயா தொண்டு வாழ்க !
குழந்தைகள் சங்க பெருமைகள் வளர்க !

**C.வளர்மதி**
**முன்னாள் அமைப்பாளர்**

# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பின் 20ம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் ஓர் கண்ணோட்டம்



அருணோதயா குழந்தைகள் சங்கம் என்றாலே மனதில் ஒரு குதுகலம் .. எங்கு பார்த்தாலும் குழந்தைகளின் மழலை குரல்கள் ,கள்ளம் கபடமற்ற சிரிப்பொலிகள், எதையும் புதுமையாக யோசிக்கும் சிந்தனை. ஆசிரியரிடம் கற்றுக் கொண்டதைவிட குழந்தைகளிடம் கற்று கொண்டதே அதிகம் இவ்வளவு சிறப்பு மிக்க குழந்தைகளிடத்தில் பணிபுரிய வாய்ப்பு கொடுத்த இயக்குனர் அவர்களுக்கு முதலில் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்...

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம் 1992 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு செயல்பாட்டில் பல நூறு குழந்தைகளை பள்ளியில் சேர வழிவகை செய்தது. இக் குழந்தைகளின் தொடர் கல்வியை குழந்தைகளின் வாயிலாகவே கண்காணித்திடவும் ஐ.நா சபை குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கை சாசனத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள உரிமைகளை அடையவும் அருணோதயா குழந்தைகள் சங்கம் 2001 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பில் 3000 ற்கும் மேற்பட்ட குழந்தைகள் உறுப்பினராக உள்ளனர். குழந்தைகள் தங்கள் மீதான அடக்குமுறைக்கு எதிரான வலுவான சக்தியாக உருவெடுத்து சமூகத்தில் தங்கள் பங்கேற்பினை நிலைநாட்டிட என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறோம். மேலும் குழந்தை உரிமைகளுக்காக பல செயல்பாடுகளை செய்து வருகின்றோம்..

அருணோதயா குழந்தைகள் சங்கம் கூட்டமைப்பு துவங்கி 20 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் குழந்தைகள் 20ஆம் ஆண்டை மகிழ்ச்சியோடு கொண்டாட முடிவு செய்தனர். அதற்கான திட்டமிடல் கூட்டங்கள் நடை பெற்றது. விழா குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஓவ்வொரு நிகழ்வு முடிந்ததும் மதிப்பீடும் செய்யப்பட்டது.

**20 ஆம் ஆண்டு கொண்டாட்டத்தை கீழ் காணும் வகையில் கொண்டாட முடிவு செய்தனர்**

1. 20 ஆண்டுகள் முடிவடைந்ததை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு மண்டலத்திலும் 20 மரங்களை நட வேண்டும்.
2. குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய கோரி சைக்கிள் பேரணி.
3. 20 ஆண்டுகள் சாதனை குறித்து வண்ணக்கோலம்.
4. மண்டலம் தோறும் போட்டிகள் நடத்துவது.
5. நடக்கும் அனைத்து நிகழ்விற்கும் முன்னாள் குழந்தைகள் சங்க குழந்தைகளை அழைத்து அவர்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள செய்ய வேண்டும்.
6. நிறைவாக மாநாடு நடத்த வேண்டும்

மாதம் ஒரு நிகழ்வு என 4 மாதங்கள் நாம் கொண்டாடலாம் என குழந்தைகள் திட்டமிட்டனர்.

**மரம் நடும் விழா**



2.9.2021 எண்ணூர் பகுதியில் கத்திவாக்கம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர், பகுதி தலைவர்கள் , அருணோதயா இயக்குனர் கலந்து கொண்டனர். முன்னாள் குழந்தைகள் சங்க உறுப்பினர் திருமதி.துர்காதேவி கலந்து கொண்டார். துர்காதேவி தற்சமயம் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் வாழ்கை திறன் பயிற்சியாளராக உள்ளார். குழந்தைகள் சங்கத்தில் அவர் எடுத்துக் கொண்ட பயிற்சியின் மூலம் தான் தனக்கு பயிற்சியாளராக மாறும் திறன் வளர்ந்தது என்றும் மேலும் சமூகப்பணி பட்டபடிப்பு படிப்பதற்கு என் குழந்தைகள் சங்கமே ஒரு காரணமாக இருந்தது என்று பகிர்ந்து கொண்டது சிறப்பாக இருந்தது.

எண்ணூர் திருவெற்றியூர் நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆல் இந்தியா ரேடியோ பள்ளியிலும் மரம் நடுவிழா நடைபெற்றது. பகுதியில் உள்ள குழந்தைகள் சங்கம் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் எண்ணூர் சின்னகுப்பம் பகுதி குழந்தைகள் சங்கம் அவர்கள் பகுதியில் மரம் நட்டனர், இந்நிகழ்வில் சின்னகுப்பம் பகுதி தலைவர்கள், பெண்கள் குழு உறுப்பினர்கள், இளைஞர்கள் அனைவரும் குழந்தைகளுடன் இணைந்து மரம்நாடும் விழாவில் கலந்து கொண்டது சிறப்பாக இருந்தது.

3.9.2021கொருக்குபேட்டை மண்டலத்தில் மரம் நடும் விழா நடைபெற்றது. H 6 காவல் நிலைய ஆய்வாளர், சென்னை மாநகராட்சி இளநிலைப் பொறியாளர், முன்னாள் குழந்தைகள் சங்க உறுப்பினர் திரு .சுரேஷ் மற்றும் அருணோதயா இயக்குனர் அவர்களும் கலந்து கொண்டனர். திரு.சுரேஷ் சிறு வயதில் தன் குழந்தைகள் சங்க அனுபவங்களை பகிர்ந்து கொண்டது சிறப்பாக இருந்தது. குழந்தைகள் சங்கத்தில் தான் எடுத்து கொண்ட பயிற்சி என் வாழ் நாட்களை வழி நடத்துகிறது என்று அவர் உணர்வுபூர்வமாக பகிர்ந்து கொண்டது மற்ற குழந்தைகளுக்கு ஒரு முன் மாதிரியாக இருந்தது.

4.9.2021 திருவொற்றியூர் பகுதியில் கன்னியாகுருக்குலம் மேல்நிலைப் பள்ளியில் மரம் நடும் விழா நடை பெற்றது. இந்த விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர், அருணோதயா இயக்குனர் மற்றும் குழந்தைகள் சங்க உறுப்பினர் திரு. ராஜேஷ் அவர்கர்களும் கலந்து கொண்டார். ராஜேஷ் அவர்கள் பேசும் போது தன் குழந்தைப் பருவத்தில் குழந்தைகள் சங்கத்தில் தன் அனுபவங்களையும் அந்த அனுபவங்களால் தான் இப்போது ஒரு அரசுசார்பற்ற அமைப்பு இயக்குனராக உள்ளேன் குழந்தைகள் சங்கத்தில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் தான் என்னை ஒரு இயக்குனராக மாற்றியுள்ளது என்று பகிர்ந்து கொண்டார்.

குழந்தைகள் இந்த மரங்கள் வளர்வது போல குழந்தைகள் சங்கமும் வளர்ந்து சமூகத்திற்கு பயன் அளிக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்த செயல்பாடுகளை செய்தது வரவேற்கதக்கது.

**சைக்கிள் பேரணி**




26.09.2021 அன்று குழந்தைகள் பாதுகாப்பை முன்னிட்டு நான்கு மண்டலங்களிலும் சைக்கிள் பேரணி நடத்தப்பட்டது. 250 குழந்தைகள் கலந்து கொண்டனர். காவல் துறையினர்,பகுதி தலைவர்கள். அருணோதயா இயக்குனர், வழக்கறிஞர்கள், முன்னாள் குழந்தைகள் சங்க உறுப்பினர்கள், பங்குதாரர்கள் ஆதரவுடன் இந்த பேரணி நடந்தது.

எனது ‘குழந்தை பருவம் எனது உரிமையே’ என்ற வாசகம் அமைந்த ஒரே உடை அணிந்து மகிழ்ச்சியுடன் பேரணியில் கலந்துகொண்டனர்.

பங்குதாரர்கள் அனைவரும் குழந்தைக்கு பாதுகாப்பாக இருந்தது சிறப்பம்சமாக இருந்தது. பகுதி மக்களுக்கும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தியது இந்த பேரணியின் வெற்றியாக இருந்தது. முன்னாள் குழந்தைகள் சங்க உறுப்பினர்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் அவர்களுடன் ஊர்வலத்தில் கலந்து கொண்டது சிறப்பு.

**வண்ண ஓவியம்**

அக்டோபர் 19,21,23,23ஆகிய தேதிகளில் நான்கு மண்டலங்களில் வண்ண ஓவியம் குழந்தைகள் சங்க சாதனைகள் குறித்து வரையப்பட்டது.

வண்ண வண்ண பொடிகளினால் குழந்தைகளின் பிஞ்சு கரங்களால் வரைந்த ஓவியங்கள் பார்த்தவர்களின் கண்களையும், கருத்தையும் கவரும் வண்ணம் இருந்தது.

19.10.2021 அன்று கொருக்குப்பேட்டை அண்ணா நகரில் நடந்த நிகழ்வில் பகுதி தலைவர் பட்டறை முதலாளி கலந்து கொண்டு ஆரம்ப காலகட்டத்தில் அவர்கள் பகுதியில் குழந்தை தொழிலாளர் நிலை குறித்தும் இன்றைய நிலை குறித்தும் பேசியது சிறப்பாக இருந்தது. அவர்கள் பகுதியில் குழந்தை தொழில் அகற்றும் பணியில் அருணோதயாவுடன் கைகோர்த்து செயல் பட்டதை நன்றியுடன் நினைவு கூறியது சிறப்பாக இருந்தது.

21.10.2021 அன்று எண்ணூர் மண்டலத்தில் அன்னை சிவகாமி நகர் பள்ளியில் குழந்தைகளின் வண்ண ஓவிய நிகழ்வு நடைபெற்றது . பள்ளி தலைமை ஆசிரியர் ,ஊர்தலைவர், முன்னாள் குழந்தைகள் சங்க உறுப்பினர்கள் திரு.குணா, திரு.மார்த்தாண்டன் கலந்து கொண்டு அவர்களின் நினைவுகளை பகிர்ந்து கொண்டது நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக இருந்தது.

23.10.2021 அன்று திருவெற்றியூர்  வரதராஜன் ஆரம்பப்பளியில் வண்ண ஓவியம் வரைந்தனர் பள்ளி தலைமை ஆசிரியர். அருணோதயா இயக்குனர், அங்கன்வாடி ஆசிரியர் மற்றும் அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் ஆலோசகர் செல்வி.ரம்யா, கலந்து கொண்டு சிறப்பித்தனர். குழந்தைகள் சங்கத்தின் 20 ஆண்டு சாதனைகளை வண்ண ஓவியங்களாக வரைந்து இருந்ததனர்.

23.10.2021 இராயபுரம் பகுதியில் H.1 காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் குழந்தைகளுக்கு ஏற்படும் பாலியல் வன்முறை குறித்து உணர்வுபூர்வமாக பகிர்ந்து கொண்டது நெஞ்சை தொடும் நிகழ்வாக இருந்தது. பகுதித்தலைவர்கள், திரு.ரமேஷ்குமார்,உதவி தலைமை ஆசிரியர்  சென்னை உயர்நிலைப்பள்ளி மணிகண்ட முதலி தெரு அவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் முன்னாள் குழந்தைகள் சங்க உறுப்பினர் செல்வி பிரியதர்ஷினி ,அருணோதயா இயக்குனர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திறன் வெளிப்பாடு நிகழ்வுகள்**

அக்டோபர் 21,31, நவம்பர் 5, 12, 27,11 ஆகிய தேதிகளில் மாறுவேடம், ஓவியம், பேச்சுத்திறன்,விளையாடடு நிகழ்வுகள வைக்கப்பட்டது. இதில் சுமார் 250 குழந்தைகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்விலும் முன்னாள் குழந்தைகள் சங்க உறுப்பினர்கள் பங்கேற்று நடுவர்களாக இருந்தது சிறப்பாக இருந்தது. வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு  இறுதி நிகழ்வாக நடைபெறும் மாநாட்டில் பரிசுகள் வழங்க திட்டமிடபட்டுள்ளது .

இந்த நிகழ்வுகள் அனைத்திலும் அருணோதயா பணியாளர்களின் வழிகாட்டுதல் உறுதுணையாக இருந்தது

**மாநாடு**

இறுதியாக நடக்க இருக்கும் மாநாட்டில் குழந்தைகள் சங்க முன்னாள் பணியாளர்கள், குழந்தைகள் சங்க பங்குதாரர்கள், பெற்றோர்கள் அனைவரையும் கௌரவிக்க  வேண்டும், குழந்தைகள் சங்கத்தில் இருந்து இளைஞர்களாக வெளியேறியவர்களின் வெற்றி கதைகள் அடங்கிய புத்தகம் வெளியிட வேண்டும், ஆடல்,பாடல்,கொண்டாட்டத்துடன் நடத்த வேண்டும் என திட்டமிட்டு உள்ளீர்கள்.

குழந்தைகள் சங்கம் 20 ஆண்டு கொண்டாட்டத்தை  திட்டமிட்டபடி வெகு சிறப்பாக கொண்டாடி வருகிறீர்கள் மாநாடும் சிறப்பாக கொண்டாடுவீர்கள் என்று நம்புகின்றேன்.


குழந்தைகள் என்றாலே புதுமை,  குழந்தைகள் என்றாலே புத்துணர்ச்சி,  குழந்தைகள் என்றாலே உண்மை

இன்றைய குழந்தைகளே நாளைய சமூக மாற்றத்திற்கு  காரணமாக இருக்க போகிறீர்கள் ,உங்கள் நோக்கம் வெற்றி பெற உங்கள் பங்கேற்ப்பு ஓங்கிட, உங்களின் இந்த மகிச்சி மேலும் மேலும் பெருகிட உங்கள் குழந்தைகள் சங்கம் மேன்மேலும் பல ஆண்டுகள் வளர வாழ்த்துகின்றேன்.

**S.செல்வி**
**குழந்தைகள் சங்க கருத்துரையாளர்**
**அருணோதயா**



Education Is my Birth Righ
Make My Future Bright
And Right.
See my Tear
Stop Child Labour
By.
Y. Madhu Mitha
XI

save elecricity
சுற்றுச்சூழலைப்
பாதுகாப்போம்.
Save tree
Save Fuel
Go green
Y. Madhu Mitha XI



# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பின் 20ம் ஆண்டு விழா பாடல்...

காற்ற போல பறந்து போவ எனக்கு உரிமைகள் இருக்கு
எங்களோட அருணோதயா குழந்தைகள் சங்கம்
இருக்கும் போது தேவையில்லாத கவலை எதற்கு

காற்றா நான் பறந்திட உரிமைகள் இருக்கு
நம் சங்கம் இருக்கையில் கவலைகள் எதற்கு
பங்கேற்று முன்னேறு தடைகளை தகர்த்து
இவ்வானம் நம் எல்லை வளர்ந்திடு முளைத்து (2)

கொண்டாடுவோம் ! கொண்டாடுவோம் !
இருபதாம் ஆண்டை கொண்டாடுவோம் !
கை சேருவோம் நம் கை சேருவோம் !
நம் உரிமை காத்திட கை சேருவோம் !

கொண்டாடுவோம் ! கொண்டாடுவோம் !
இருபதாம் ஆண்டை கொண்டாடுவோம் !
கை சேருவோம் நம் கை சேருவோம் !
அருணோதயா குழந்தைகள் சங்கம்
நம் உரிமை காத்திட கை சேருவோம்

சிட்டெறும்பு பேசுது சித்திரம் உருவானது
பேச்சாற்றல் தந்தது தலைமைத்துவம் வந்தது
கலைப்பயிற்சி தந்தது பறையாட்டம் வந்தது
எங்களுக்கு பங்கேற்பு உரிமைகளும் கிடைத்தது (2)

அன்று ஓடாய் தேய்ந்த கைகள்
இன்று வானில் பறக்குது பாரு
தடை தாண்டி வந்த கால்கள்
பறை இசையாய் பிளிருது கேளு

ஆ...... ஆ......... ஆ....... (2)

கொண்டாடுவோம்! கொண்டாடுவோம் !
இருபதாம் ஆண்டை கொண்டாடுவோம் !
கை சேருவோம் நம் கை சேருவோம் !
நம் உரிமை காத்திட கை சேருவோம் !

நேற்று நாம குழந்தைகளாய்
இன்று ஆனோம் தலைவர்களாய்
உரக்க சொல்லு உரிமைகளை
நம் நோக்கம் நிறைவேறும் காலம் வரை (2)

அன்று வாய்ப்பு கேட்ட குரல்கள்
இன்று பாடம் எடுக்குது பாரு
படம் போஸ்டர் ஒட்டிய கைகள்
இன்று ஆக்ஷன் சொல்லுது கேளு.

காற்றா நான் பறந்திட உரிமைகள் இருக்கு
நம் சங்கம் இருக்கையில் கவலைகள் எதற்கு
பங்கேற்று முன்னேறு தடைகளை தகர்த்து
இவ்வானம் நம் எல்லை வளர்ந்திடு முளைத்து
கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
இருபதாம் ஆண்டை கொண்டாடுவோம்
கை சேருவோம் நம் கை சேருவோம்
அருணோதயா குழந்தைகள் சங்கம்
நம் உரிமை காத்திட கை சேருவோம் !

(காற்றா நான் பறந்திட)




# ARUNODHAYA

**CENTRE FOR STREET AND WORKING CHILDREN**

19/9/2, Bazaar Street, Royapuram, Chennai - 600 013

Ph : 044 - 42632264, Email : arunodhayaorg@gmail.com

www.arunodhayacentre.in